සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

පළමු වාර පරීක්ෂණය 2018
முதலாம் தவணைப் பரீட்சை 2018
First Term Test 2018

6 ශ්‍රේණිය
தரம் 6
Grade 6

විද්‍යාව
விஞ்ஞானம் } I
Science

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two Hour

සැලකිය යුතුයි.
(i) සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න. මෙම පත්‍රය සඳහා ලකුණු 40ක් හිමි වේ.
(ii) නිවැරදි පිළිතුර යටින් ඉරක් අඳින්න.

---

01. நுண்ணங்கிகளை அவதானிக்கும் போது மாணவர்கள் பெற்ற மாதிரியில் குறைந்தளவான நுண்ணங்கிகள் கொண்ட மாதிரி.

(1) தென்னமட்டை பதனிடும் நீர் (2) குளத்து நீர் (3) தேன் (4) தேங்காய்நீர்

02. தாவரங்கள் உணவு உற்பத்தி செய்வதற்கான சக்தியை வழங்குவது,

(1) நுண்ணங்கிகள் (2) சூரியன் (3) சந்திரன் (4) மனிதன்

03. உயிரற்ற சூழலுடன் தொடர்புடைய நிகழ்வு.

(1) குழந்தைப் பிறப்பு (2) பூ பூத்தல்
(3) பறவைகள் பறத்தல் (4) பூமியதிர்ச்சி ஏற்படல்.

04. அசைவைக் காட்டும் ஆனால் இடம்பெயராத அங்கியாவது,

(1) குளவி (2) கடல் அனிமனி. (3) நத்தை (4) அட்டை.

05. காபனீரொட்சைட்டு வாயுவை இணங்கான ஆய்வுகூடத்தில் பயன்படுத்தும் பதார்த்தம்.

(1) சுண்ணாம்பு நீர் (2) தேங்காய்நீர (3) நீர் (4) மதுசாரம்

06. கீழ்வுள்ள பதார்த்தங்களை கொண்டு விடைத்தருக,.
(a) பழரசம்
(b) வெண்கட்டி
(c) L.P. வாயு

மேலுள்ள பொருட்களில் திண்ம திரவ வாயு முறையே உள்ள விடை.

(1) b, c, a . (2) c, a, b . (3) a, b, c . (4) b, a, c .


07. வாழ்நாள் முழுதும் வளர்ச்சியைக் காட்டும் அங்கி.

(1) பசு (2) நாய்
(3) மா மரம் (4) வௌவால்

08. பசு குட்டியீனுதல் மற்றும் சிங்கம் விலங்கினை உணவாக உட்கொள்ளல் ஆகிய நிகழ்வுகளில் அங்கிகளின் பொது இயல்பாக முறையே கொள்வது.

(1) இனப்பெருக்கமும் வளர்ச்சியும். (2) வளர்ச்சியும் அசைவும்.
(3) போசணையும் இனப்பெருக்கமும். (4) இனப்பெருக்கமும். போசணையும்

09. கீழுள்ள அங்கிகளில் அதிகளவான அங்கிகள் இடம்பெயறும் முறையாவது.



(1) பறத்தல். (2)ஊர்ந்து செல்லல்.

(3) நீந்துதல். (4) பாய்ந்து பாய்ந்து செல்லல்.

10. பொருளொன்றில் உள்ள பதார்த்தங்களின் அளவை அளக்கப் பயன்படுத்தும் அலகு எது?

(1) திணிவு (2) நிறை (3) விசை (4) அடர்த்தி

11. உருவில் உள்ளவாறு மீற்றர் கோலில் வளிநிரப்பபட்ட பலூன்களில் சமபடுத்தப்பட்டதன் பின் ஒன்று வெடிக்கப்பட்டது


இச் செயறபாட்டின் மூலம் காட்டப்படுவது,

(1) வாயுக்கு திடமான கனவளவு உண்டு என்பது.

(2) வாயு வெளியில் இடத்தைப் படித்து கொள்ளும் என்பது

(3) வாயு இடங்கும் பாத்திரத்தின் வடிவத்தை பொறும்.

(4) வளிக்கு திணிவு உண்டு என்பது.




மீற்றர்கோல்

பலூன்

12. திண்ம திரவம் வாயு என பிரிக்ககூடியது அதன்……….. அடிப்படையில்.

(1) துணிக்கை. (2) பண்பு. (3) பௌதீக இயல்பு. (4) மணத்தின்.

13. நொருங்கும் இயல்பு கொண்ட திரவியம்,.

(1) மணல் (2) இறப்பர் (3) தங்கம். (4) கண்ணாடி.

14. எரிப்பொருளாக பயன்படுத்தாத பொருளொன்று.

(1) மண்ணெண்ணை (2) விறகு (3) காபனீரொட்சைட்டு (4) எதனோல்

15. இடங்கும் பாத்திரத்தின் வடிவத்தை பொறும் பதார்த்ததினை தெரிவு செய்க.

(1) நூல் (2) பலகைதுண்டு (3) செங்கல் (4) பெறறோல்

16. மாணவன் ஒருவனின் தண்ணீர் போத்தலினுல் பனிகட்டிகளை இட்டு சற்றுநேரத்தின் பின் அவதானித்த போது அதன் வெளிப்பரப்பில் நீர்த்துளிகள் சில காணப்பட்டன இதற்கான காரணம் யாது,

(1) போத்தலில் துவாரம் உண்டு.

(2) போத்தல் மழையில் நலைந்திருத்தல்.

(3) வளிமண்டல நீராவி ஒடுங்கி நீர்த்துளியாக காணப்படல்.

(4) போத்தல் நீர் வழிந்தோடுதல்

17. திரவத்தின் கனவளவை அளக்கப்பயன்படுத்தும் உபகரணம்,

(1) அளவுச்சாடி (2) மீற்றர் (3) கைவில்லை (4) முகவை

18. புவியில் உள்ள பயன்பாட்டிற்கு உகந்த நீரின் சதவீதம்,

(1) 10% (2) 1% (3) 0.1% (4) 0.01%

19. நீரின் திண்ம நிலைக்கான உதாரணமாக அமையாதது,

(1) பனி (2) மூடுபனி (3) பனியாறு (4) பனிக்கட்டி

20. சிறந்த மின்கடத்தி பதார்த்தம்,

(1) கண்ணாடி (2) பிலஸ்டிக் (3) செப்பு (4) இரப்பர்

**IIபகுதி**

**முதலாம் வினாவுக்கும் மேலும் 04 வினாக்களுக்கும் விடைத்தருக.**

01) (A) கீழேயுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) அடையாளத்தையும், பிழையாயின் (×) அடையாளத்தையும் கூட்டினுள் இடுக.

| | | |
|---|---|---|
| (i) | சுற்றாடல் என்பது எங்களை தவிர்த்து எங்களை சுற்றியுள்ள அனைத்தும் | ( ) |
| (ii) | சூழலில் உள்ளவற்றை சடப்பொருள் சக்தி என இருவகையாகப் பிரிக்கலாம் | ( ) |
| (iii) | சுற்றாடலில் உயிருள்ளவை உயிரற்றவை என இரண்டு மட்டுமே உண்டு | ( ) |
| (iv) | வளர்ச்சி போசனை வெளியில் இடத்தைப்பிடித்தல் போன்றன உயிரியின் இயல்பாகும் | ( ) |
| (v) | கழிமுகத்தில் சவர்நீர் உள்ளது. | ( ) |
| (vi) | ஒளிநுணுக்குகாட்டி இயற்குவது மின்சாரத்தில் ஆகும் | ( ) |
| (vii) | நீர் திண்மம், திரவம் , வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படுகின்றது. | ( ) |
| (viii) | விலங்குகள் போன்று தாவரங்களுக்கும் இடம்பெயர முடியாது. | ( ) |

(B) தொடர்புபடுத்துக.

| | | |
|---|---|---|
| (i) | மீளும்தன்மை கொண்ட பொருள். | இனப்பெருக்கம் |
| (ii) | அங்கியின் இயல்பு. | மாமரம் |
| (iii) | குடிப்பதற்கு சிறந்த சுத்தமான நீர் | காபனீரொட்சைட்டு |
| (iv) | தனக்கு தேவையான உணவை தாமே தயாரிக்கும் அங்கி | இறப்பர் நாடா |
| (v) | ஒருவித்திலை தாவரம். | ஒளி |
| (vi) | இருவித்திலை தாவரம். | தற்போசணி |
| (vii) | தாவரத்தில் உணவு தயாரிக்க தேவையாது. | நன்னீர் |
| (viii) | திணிவற்றது இடத்தைப்பிடித்து கொள்ளாத பொருள். | தென்னை |

((புள்ளி 1 x 16)

02) கீழ்வுள்ள சொற்களை கொண்டு இடைவெளியை நிரப்புக. .

(தற்போசனி போசணை நீர் ஒட்சிசன் வாயு சூரியஒளிச்சக்தி ஒளித்தொகுப்பு சுவாசம் காபனீரொட்சைட்டு, தாவரவுண்ணி,பிறப்போசணி உற்பத்தியாக்கி , தொட்டாச்சுருங்கி,இடப்பெயர்வு )

தாவரம் தமக்கு தேவையான உணவை தயாரிக்கும் செயற்பாடு (i) .................................. ஆகும் . அதற்காக வேரின் மூலம் மண்ணில் இருந்து பெறுவது (ii)............................ஆகும் வளிமண்டலத்திருந்து பெற்றுக் கொள்ளும் (iii)................................ வாயுவைக் கொண்டு. அதற்கான சக்தியாக பயன்படுவது (iv)........................................... ஆகும். அதன் பக்கவிளைப் பொருளாக (v)................................. வெளியிடப்படுகிறது. நாம் தாவரங்களை (vi).................................. என அழைக்கின்றோம். தாவர உணவுகளைப் உட்கொள்ளும் விலங்குகளை (vii)............................. என அழைக்கின்றோம். விலங்குகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேறொன்றை தங்கியிருப்பதால் விலங்குகளை (viii)...........................எனஅழைக்கின்றோம். உணவினால் விலங்குகளுக்கு சக்தி கிடைக்கின்றது அததோடு அச்செயற்பாடு (xi)................................ என அழைக்கின்றதி. சக்தியைப் பயன்படுத்தி விலங்குகள் இடத்திற்கு இடம் செல்வது (x)................................ என அழைக்கின்றோம். இதே போன்று தாவரங்கள் காட்டும் அசைவுக்கு உதாரணமாக (ix)........................... தாவரத்தினை குறிப்பிடலாம்.

(புள்ளி 11)

03) எங்களது சூழலில் சடப்பொருள் சக்தி என பரவி கிடக்கின்றது அவற்றை அடையாளம் காண பலவழிகள் உண்டு

i. சூழலை அவதாணிக்க பயன்படும் புலன்களை கொண்டு அட்டவணையை நிரப்புக.

| புலன்கள் | நிகழ்வுகள் |
|---|---|
| a. ……………………………………. | ஒளி நிறம் |
| b. ……………………………………. | தொடுகை |
| c. ……………………………………. | ஒலி |
| d. ……………………………………. | சுவை |
| නාසය | e. ……………………………………. |

( புள்ளி 05)


ii. அவதாணிப்புக்காக பல உபகரணங்கள் பயன்படுகின்றது அதனை கருத்தில் கொண்டு பின்வருவனவற்றை இணைக்குக.

| | |
|---|---|
| (1) வெப்பமாணி | (a) சிறிய எழுத்துகளை பெரிதாக்கி பார்க்க |
| (2) தொலைக்காட்டி | (b) குளிர் அலலது வெப்பத்தை அளக்க |
| (3) இருவிழியன் | (c) திணிவை அளக்க |
| (4) கைவில்லை | (d) நுண்ணங்கியை அவதாணிக்க |
| (5) தராசு | (e) விளையாட்டுப் போட்டியை அவதாணிக்க |
| (6) நுணுக்குகாட்டி | (f) நட்சத்திரத்தினை அவதாணிக்க |

( புள்ளி 06)

04) அங்கிகளை வகைப்படுத்த இருக்கிளைச்சாவி பயன்படுத்தப் படுகின்றது.

i) இடைவெளி நிரப்புக. ( புள்ளி 04)




ii) அங்கிகளின் பிரதான மூனறுப் பிரிவுகளையும் தருக. (புள்ளி 03)

iii) அட்டவணையை விடைத்தாளில் பிரதி செய்து இடைவெளிகளை நிரப்புக. (புள்ளி 03)

| பதார்த்ததின் நிலை | உருவம் | கனவளவு |
|---|---|---|
| a)…………………………..... | திடமான உருவம் உண்டு. | b)…………………………..... |
| c)…………………………..... | திடமான உருவம் இல்லை | d)…………………………..... |
| e)…………………………..... | f)…………………………..... | திடமான கனவளவு இல்லை. |

iv) இரப்பர் நாடாவின் விஷேட இயல்பு யாது? ( புள்ளி 01)

05) நீரானது உலகின் முக்கியமான சொத்தாகும் அதனை பாதுகாப்பது எமது கடமையாகும்.

i) உயிர்வாழ்வதற்கு நீரின் முக்கியத்துவம் 02 தருக. ( புள்ளி 02)

ii) மனித நடவடிக்கை காரணமாக நீர்மாசடையும் முறை 02 தருக. ( புள்ளி 02)

iii) நீர் காணப்படும் மூன்று பௌதீக முறைகளையும் எழுதுக ( புள்ளி 03)

iv) நன்னீர் காணப்படும் இடங்கள் 2 தருக. ( புள்ளி 02)

v) உவர்நீர் காணப்படும் இடங்கள் 2 தருக. ( புள்ளி 02)

06) தாவர விலங்கு பல்வகைமையைக் கொண்டு விடைத் தருக.

i) தாவரத்தின் பிரதான வேர்வகை 02யும் குறிப்பிடுக. ( புள்ளி 02)

ii) தாவர பல்வகைமையில் செல்வாக்கு செலுத்தும் தாவரத்திலுள்ள காரணி 02 தருக ( புள்ளி02)

iii) தாவர அசைவைக் காட்டும் தாவரங்களுக்கு 3 உதாரணம் தருக ( புள்ளி 03)

iv) இடம்பெயர முடியாத ஆனால் அசைவைக் காட்டும் விலங்கு 2 தருக. ( புள்ளி 02)

v) தற்போசணி பிறப்போசணி ஆகிய அங்கிகளுக்கு உதாரணம் 01 வீதம் தருக ( புள்ளி 02)